நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 9

தொகுதி: 114

திருவள்ளுவர் ஆண்டு 2051

திங்கள் இதழ்

விலை: ரூ.20

செப்டம்பர் - 2020

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறியாளர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர் இரா.சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1.	இதழ் மணம் - பேராசிரியர் இரா.சதாசிவம்	4
2.	சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	8
3.	திராவிட மொழி இலக்கணங்களில் சொல் வகைப்பாடு பேராசிரியர் செ.வை.சண்முகம்	10
4.	பொருநராற்றுப்படை – ஒரு சூழலியற்பார்வை கசுத்தூரி இராமசாமி	38

வலைதளம்

www.maduraitamilsangam.com / www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள் கட்டணம்	ரூ.3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க் கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேரா.இரா.சதாசிவம், பதிப்பாசிரியர்

'பாவலனுக்குப் பழங்கயிறும் பாட்டாகும்' என்னும் தொடரே பாட்டாகும். பேராசான் இரா. இளங்குமரனார் தேய்புரிப் பழங்கயிற்றினார் பாடலை எடுத்து விளக்கும் நயம் இன்புறத்தக்கது. பொன்னையும் மணியையும் நகையாக்கிப் பொன்னை மறந்து அணிகலனைப் பார்க்கச் செய்வதுபோல, கவிஞன் சொல்லையும் பொருளையும் சேர்த்துத் தம் கற்பனைத் திறத்தால் கவிதை படைக்கின்றான்.

கயிற்றுக்குப் பழந்தமிழ்ப் புலவன் படைத்திருக்கும் அடைமொழி "தேய்புரிப் பழங்கயிறு" என்பதாகும். பழங்கயிறு என்பதே சிதிலம் அடைந்தது என்பதற்குப் போதியசான்று. புலவன் தேய்புரிப் பழங்கயிறு என விளக்குவது புலவனுடைய மொழி, கவிதையாகிக் கற்பவரைச் சிந்திக்கவும் குறிப்புப் பொருளை நீள நினைப்பதற்கும் கற்பனை உலகிற்குக் கவிதை இழுத்துச் செல்கிறது. பொருளும் இன்பமும் ஒன்றை ஒன்று தழுவி நிற்கிறது.

பொருளின்றி வாழ்க்கை சிறப்பதில்லை; பொருள் ஈட்டுவதே வாழ்க்கையாகிக் காலம் போனால் வாழ்க்கை துய்த்தல் இல்லாத வெறுமை; பயனற்ற வாழ்க்கையாகப் போய்விடும். தலைவன் பொருள் ஈட்டச் சென்றகாலம் வறிதே கழிய, தலைவியுடன் அமைந்த இல்வாழ்வு துய்த்தலும் ஈதலும் இன்றிப் போவதைக் குறிப்பாக உணர்ந்த தலைவனின் துயரத்தைத் தேய்புரிப்பழங்கயிறு என்னும் உவமை வாயிலாக உணர்த்தும் செய்தி, நின்று நிலைபெறப் பாடலைத் தொகுத்த ஆசிரியன், புலவனைத் தேய்புரிப்

பழங்கயிற்றினார் என்னும் பெயர் சூட்டி மகிழ்ந்திருப்பது தேய்புரிப் பழங்கயிற்றினார் என்னும் தொடரே பாடல்முழுவதையும் காட்சிப்படுத்துகின்ற அருமை எண்ணி இன்புறத்தக்கது.

பேராசிரியர் இரா.இளங்குமரனார் எளிய இனிய நடையில் பழந்தமிழ்ப்பாடலை கற்பவர் மனம் கவிதைச் சுவையில் நாட்டம் கொள்ள உரை வகுத்துள்ளமை கற்பவர்க்கு இன்பம் பயப்பதாகும். பாடலைப் படித்துப் படித்து மனதில் பதித்துக் கொள்ளலாம். இளிவும் இழிவும் ஒரு பொருளில் வழங்கிய தொன்மை நற்றிணைக் காலம் என ஆசிரியர் நினைவுறுத்துவது கருத்திற் கொள்ளத்தக்கது.

பேராசிரியர் செ.வை.சண்முகம், “மொழி இலக்கணங்களின் சொல்வகைப்பாடு” என்னும் தலைப்பில் மொழியியல் சிந்தனை குறித்த ஆய்வை மேற்கொண்டுள்ளார். திராவிடமொழி, வடமொழி என இரு வேறு மொழிக்குடும்பங்களில் சொல்வகைப்பாடு குறித்த ஆய்வு அம்மொழிகளில் இலக்கண இலக்கிய சிந்தனை கருத்தாடல் என்னும் வழக்கு, செய்யுள் என்னும் இருவேறு திறத்தும் ஆய்வுமேற்கொள்ளப்பட்டு கற்பவர்களுக்கு மொழியியல் சிந்தனையோடு இலக்கிய மேற்கோள்களையும் காட்டும் நுட்பம் படிப்பவர்களுக்கு இன்பம் பயப்பதாகும்.

தொல்காப்பியம் அறிவு உணர்வின் வெளிப்பாடாகப் படைக்கப்பட்டிருப்பதும் எழுத்து, சொல், பொருள் என முப்பொருள் குறித்த வரம்பு இது என எல்லை வகுத்துள்ளதும் வடசொல் ஆட்சி வரும் இடங்களில்,

“வடசொற்கிளவி வடவெழுத்து ஓரீஇ
எழுத்தொடு புணர்ந்தது சொல்லாகுமே”

“சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்” என்ற மொழியை ஆளும் திறம் குறித்த சிந்தனை தமிழ் இலக்கண இலக்கியத்தைப் பாதுகாத்துள்ளது. தொல்காப்பியம் நால்வகைச் சொற்கள் குறித்த விளக்கம் உரையாசிரியர் சிந்தனையில் ஏற்படுத்தியுள்ள தாக்கம்

தமிழ் மொழியை மேலும் சிந்திக்கவும் மொழி சிதையாமல் தொல் இலக்கிய இலக்கணப் புரிதலுக்குரிய மரபை ஏற்படுத்தி வாழையடி வாழையாக தமிழ்நெறி பாதுகாக்கப்பட்டுள்ள அருமைப்பாட்டைத் தொல்காப்பியர் வழி நின்று ஆசிரியர் விளக்கும் திறம் கற்று இன்புறத்தக்கது.

வடமொழி, புரோகிதர்களுக்கு மட்டும் உரிய மொழியல்ல: அதன்கண் பாலி, பிராகிருதம் போன்ற புத்தமதக் கருத்தாடல் சிந்தனையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய செய்தியையும் பேராசிரியர் விளக்குவது அறிதற்பாலது. வடமொழி "வக்ரோத்தி" என்னும் "விகாரம் உயிர்" என இலக்கிய இன்பம் பயப்பதை ஐயப்பப்பணிக்கர் போன்ற அறிஞர்கள் கருத்தும், ஆந்திர மொழியில் தெலுங்கு மொழியின் அணிகலன் என்னும் நூல் குறித்த ஆய்வைச் சுட்டுவதையும் கன்னட மொழியில் முதல் இலக்கண நூலாக "கவிராஜமார்க்கா" என்னும் நூலும் வெளி வந்துள்ளன. மலையாளத்தில் லீலாதிலகம் என்னும் நூல், இலக்க ணம் குறித்த செய்திகளை வடமொழியில் விளக்கி இருப்பதும் ஆசிரியர் சுட்டிக்காட்டுவது மேலும் ஆய்வுமேற்கொள்ளும் மாணவர்களுடைய பார்வைக்குரியன. பேராசிரியர் செ.வை. சண்முகம் இக்கட்டுரையை உலக அளவில் பயன்பாட்டுக்குரிய முறையில் தில்லி சவகர்லால்நேரு பல்கலைக்கழகத்தில் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

"திராவிடமொழி, வடமொழி என இரு வேறு
மொழிக்குடும்பங்களில் சொல்வகைப்பாடு
குறித்த ஆய்வு அம்மொழிகளில் இலக்கண
இலக்கிய சிந்தனை கருத்தாடல் என்னும்
வழக்கு, செய்யுள் என்னும் இருவேறு திறத்தும்
ஆய்வுமேற்கொள்ளப்பட்டு கற்பவர்களுக்கு...."

“பொருநராற்றுப்படை – ஒரு சூழலியற்பார்வை” என்னும் தலைப்பில் பயிரியல் துறைப்பேராசிரியர் கத்தூரி இராமசாமி அவர்கள் எழுதிய கட்டுரை இடம்பெறுகிறது. கட்டுரையில் அவர்கள் நோக்கு பழைய பாடலின் விளக்கமாக இல்லாமல் பண்டைத் தமிழகத்தின் வாழ்க்கையின் ஓர் அகப்பார்வையாக, மேல்விளக்கமாக அமைந்துள்ளது.

பண்டமாற்று மரபு என்பது பொருளாதாரத்தில் சமுதாயத்தின் நல்லிணக்கத்தின் மையம். ஒரு சமுதாயம் கொடுக்கல் வாங்கலைப் பண்டமாற்றுமுறையிலிருந்து பணமாற்றத்திற்கு கொண்டுவந்தபின்பு சமுதாய ஏற்றத் தாழ்வும் நடைமுறை வாழ்க்கையில் மக்களிடையே குவியல் பொருளாதாரமும் பெருகி அன்றாட வாழ்க்கையில் மகிழ்ச்சி போயிற்று; இயற்கையின் அழகைப் போற்றும் இயல்புநிலை மாறி பொருள் ஈட்டும் நோக்கத்தில் வாணிகப்பொருளாதாரம் இயற்கையைச் சீரழித்தது.

வணிகர்களாக வந்து நாடாண்டவர்களை எதிர்கொள்ள காந்தியடிகள் கையில் எடுத்த கருவி சுயசார்புப் பொருளாதாரம். மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை ஒருவருக்கு ஒருவர் மாற்றிக்கொள்வது சுரண்டலையும் பெருவாணிக அரசியல் கோட்பாட்டையும் உடைக்கும் என்பதை நன்கு உணர்ந்த தமிழர் மரபு நீண்ட நெடியகாலம் இந்தியாவைப் பாதுகாத்து மக்களுடைய பண்பாட்டையும் கலை, கல்வி எனப் பல்துறைப் பெருக்கத்திற்கும் வழிவகுத்தது. அதனை மீட்டெடுக்கக் காந்தியடிகள் காட்டிய வழியை விட்டுவிட்டுத் திசைதவறிப் போய்க் கொண்டிருப்பதால் மக்கள்படும் துயரம் சொல்லிமாளாது.

‘நாடென்ப நாடா வளத்தன’ என்னும் இயற்கை மேம்பாட்டைப் போற்றி வளர்த்த தமிழர் வாழ்வைப் பொருநராற்றுப்படை போற்றிப் பாடுவதை, பேராசிரியர் கத்தூரி இராமசாமி எளிய இனிய தமிழில் படைத்துள்ளார். “கத்தூரி கமழ் சாந்தும் வேண்டும்” என்பது சுந்தரர் பாடிய தேவாரம். இதழ் மணம் கமழப் பேராசிரியர் கட்டுரை அமைத்துள்ளார், படித்து இன்புறுங்கள்.

****

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

16. தேய்புரிப் பழங்கயிற்றினார்

நெடுநாள்பட்ட பழமையான கயிறு; அதுவும் தேய்ந்தது; புரியும் நெகிழ்த்தது. இன்னும் சிலநாள்கள் சென்றால் தானே அறுந்து போகும் நிலையது. அக்கயிற்றை, இருகயிற்றை, இருபாலும் இழுக்கும், 'கயிறு இழுப்புப்போட்டி' போல இரண்டு வலிய பெரிய யானைகள் இழுக்கின்றன் இழுக்காமலே அறுந்துபோகத் தக்கதை வலிய யானைகள் பற்றிய அளவிலேயே இற்றுப் போய் ஒழிந்துவிடும் அல்லவா. அதனைத் 'தேய்புரிப் பழங்கயிறு' என்று உவமைப்படுத்தியப் பாடல் ஒன்று நற்றிணையில் உள்ளது. அவ்வு வமைச் சிறப்பால் அத்தொகை தொகுத்தச் சான்றோர் அத்தொடர் கொண்டே, *'தேய்புரிப் பழங்கயிற்றினார்'* எனப்பெயர் சூட்டிவிட்டார்.

காதலிமேல் உயிர்க்கு உயிரானவன்; இல்லறம் இனிது நடத்தப் பொருள் கட்டாயம் வேண்டும். அப்பொருள், தானே வந்து குவிந்துவிடாது. அதனைத் தேடி வருவதற்குத் தலைவியைப் பிரிந்து சென்றாக வேண்டும்; பிரியாமல் உடனிருந்தால் பொருள்வ ராது. பொருள் வர வேண்டுமானால் பிரிந்தே ஆக வேண்டும்.

முரண்பட்ட இந்நிலை அவனை வாட்டியது; நெஞ்சை வருத்தியது. இன்பம் ஒருபக்கம்; பொருள் ஒருபக்கம் இரண்டும் இரண்டு பக்கத்திருந்து இழுக்கும் வலிய யானைகள்; அவன் நெஞ்சமோ தேய்புரிப் பழங்கயிறு! இரங்கத் தக்க இந்த நிலை பாட்டாகின்றது. மகிழத் தக்க நிலையில் பாடல் கிடைத்தது. இரங்கத் தக்க நிலையில் பாடியவர் பெயர் கிடைக்கவில்லை. அவர்தம் இரங்கத் தக்கத் தொடரே, மகிழத்தக்கப் பெயராக்கப்பட்டது.

"புறந்தாழ்பு இருண்ட கூந்தல் போதின்
நிறம்பெறும் ஈரிதழ்ப் பொலிந்த உண்கண்
உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்
செல்லல் தீர்கம் செல்வாம் என்னும்
செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யா மையோடு இளிவுதலைத் தருமென
உறுதி தூக்காத் தூங்கி அறிவே
சிறுது நனி விரையல் என்னும்: ஆயிடை
ஒளிறேந்து மருப்பின் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழுங்கயிறு போல
வீவது கொல் என் வருந்திய உடம்பே." (நற்.284)

பொருள் முடியா நின்ற தலைமகன், ஆற்றானாகிச் சொல்லியது.

"முதுகில் தாழ்ந்து கிடக்கும் கூந்தலையும், பூப்போலும் இதழ்களில் மை தீட்டியக் கண்களையும் உடையவளாய் என் உள்ளத்தைப் பிணித்தவளாகிய காதலியின் துயர் தீர்ப்பதற்குத் திரும்பிவிடலாம் என்கின்றது நெஞ்சம். ஆனால், எடுத்த செயலைத் தொடுத்து முடியாது விட்டுச் செல்வது இழிவாம் என்று அறிவு அழுத்திக் கூறுகின்றது. இந்நிலையால், ஒளியும் உறுதியும் வாய்ந்த தந்தங்களையுடைய களிறுகள் இரண்டு, இரண்டு பக்கமும் இழுக்கத் தேய்ந்து புரியறும் பழங்கயிறு போல அற்றுக்கெடுவது போலும் என் மெலிவமைந்த உயிர்" என்பது இதன் பொருள்.

<u>அரும்பொருள்:</u> புறம்-முதுகு; போது-பூ; உண்கண்-மைபூசப்பட்டகண்; செல்லல்-துன்பம்; எவ்வம்-துயிர்; எய்யாமை-முடியாமை; விரையல்-செல்லாதே; மருப்பு-தந்தம்; மாறு-எதிர்எதிர்; வீவது-இறப்பது; இளிவும்,இழிவும் பழநாளில் ஒப்பாக அமைந்தன. பாவல்லானுக்குப் பழங்கயிறும் பட்டாகும் அல்லவா! எத்தகைய அருமையான உவமை!

திராவிட மொழி இலக்கணங்களில் சொல் வகைப்பாடு

பேராசிரியர் செ.வை.சண்முகம்
மொழியியற்புலம்(ப.நி.)
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
சிதம்பரம். கைப்பேசி : 98651 96476

இருபதுக்கு மேற்பட்ட திராவிட மொழிகள் இந்தியா முழுவதிலும் பேசப்படுவதாயினும், எழுத்து இலக்கியமும், இலக்கணங்களும் உடைய தென்னிந்தியாவில் பேசப்படும் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய நாலு திராவிட மொழிகளே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

எல்லாத் திராவிட இலக்கணங்களிலும் இரண்டு வகைச் சொல்வகைப்பாடு காணப்படுகின்றன: i. மொழி அமைப்பை ஒட்டியது (பெயர், வினை என்றவை); ii. சொற்களின் சமூகப் பயன்பாட்டையும் வரலாற்றையும் ஒட்டியது. இரண்டாவது வகைப் பாகுபாடு தமிழில் செய்யுள் ஈட்டச் சொற்கள் என்ற முறையிலும், கன்னடம், தெலுங்கு மொழி இலக்கணங்களில் வடமொழி / தாய்மொழிச் சொற்கள் என்ற முறையிலும்; மலையாளத்தில் குறிப்பாக லீலாதிலகத்தில் வடமொழி / தாய்மொழிச் சொற்கள் என்ற கருத்தொடு மொழி உணர்வு அடிப்படையிலும் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய நாலு

மொழிகளும் ஒரு மொழிக் குடும்பம். அதாவது திராவிட மொழிக் குடும்பம் என்று கருத்தமைவு தோன்றாத காலம். வட மொழித் தொடர்பும் தாக்கமும் ஓரளவு அதிகமாக இருந்த காலம். இலக்கிய நிலையில் மொழிகள் தனித்துவம் அடைந்த காலம். எனவே லீலாதிலகம் தவிர பிற திராவிட மொழி இலக்கணங்களில் பிற திராவிட மொழி பற்றியக் குறிப்பு இல்லை.

பேச்சு மொழியும் இலக்கியங்களின் மொழி அமைப்பையும் ஆராய்வதோடு தாய் மொழியில் எழுதப்பட்ட இலக்கண நூல்களின் ஆய்வும், மொழியியல் சார் ஆய்வாக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கு ஒரு காரணம் அந்த இலக்கண நூல்களை மொழியியல் கோட்பாட்டு அடிப்படையில் புரிந்துகொள்ள உதவுவதோடு, அந்த மொழிச் சமூகத்தின் மொழியியல் சார் அறிவியல் முயற்சியை உணர்ந்து கொள்ளவும் உதவுகிறது. அதனால் இலக்கணவியல் என்ற கருத்தமைவு அண்மைக் காலமாகப் பேசப்பட்டு, ஆராய்ச்சியும் நடைபெற்று வருகிறது.

வரலாற்று ஒப்பிலக்கண ஆய்வு நோக்கில் பிற திராவிட மொழிகள் ஆராயப்படுவதைப் போலவே, பிற திராவிட இலக்கணங்களும் ஆராயப்பட்டு, ஒப்பிலக்கியம் போல ஒப்பிலக்கணம் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதை ஒட்டி ஒப்பிலக்கணவியல் கோட்பாடும் உருவாக்கப்பட்டு வரு கிறது. ஆனால் அது பரிணாம வளர்ச்சியைப் (evolutionary) புலப்படுத்தாது, ஒரு வகைக் கருத்துப் பரவல் வகையையேப் (diffusion) புலப்படுத்தும். அதுவும் வட மொழிக் கருத்துப் பரவல் வகையையேப் புலப்படுத்துகிறது.

இங்கு, இலக்கண ஆசிரியர்கள் கோட்பாடு நோக்கில் செய்த வகைப்பாட்டுக்கு மேலாக இலக்கண வருணனையில் அமைந்துள்ள கருத்துகளும் விளக்கப்படுகின்றன. உதாரணமாகத் தொல்காப்பியம் ஒரு குறிப்பிட்ட பொருண்மைக் கூறு அடிப்படையில் சமூகக் கிளைமொழிகளை விளக்கியிருந்தாலும் அவைகளைச் செய்யுள் ஈட்டச்சொல் வகைப்பாட்டில் சேர்க்கவில்லை. ஆனாலும், சொல் வகைப்பாட்டு ஆய்வில்,

சமூக கிளை மொழி உணர்வு இருந்ததும் எடுத்துக்காட்டப்படும். அதுபோல, பிற திராவிட மொழி வருணனையிலும் அமைந்துள்ள கருத்துகள் எடுத்துக்காட்டப்படும்.

தமிழ்

கிடைத்தனவற்றுள் தொல்காப்பியம் தமிழின் முதல் இலக்கணம்; தொல்காப்பியன் என்பவரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது. அதன் காலம் பற்றிக் கருத்து வேறுபாடு இருந்தாலும் பொது ஆண்டுத் தோற்றத்தை ஒட்டி அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டிருக்க வேண்டும் என்பது பரவலான கருத்து.

தொல்காப்பியம் இலக்கியத்துக்கும் சேர்த்து எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரமாக இலக்கணம் அமைந்திருப்பதும் அது உலகளாவிய நிலையில் கவனத்துக்கு உரியதாகக் கருதப்படுகிறது.

இங்கே குறிப்பிடும் வகைப்பாடு சொல்லதிகாரத்தின் இறுதி இயலான எச்சவியலின் முதலில் விளக்கப்பட்டுள்ளது.

செய்யுள் ஈட்டச் சொற்கள்

'இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்று

அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே' (1),

'செய்யுள் ஈட்டச் சொல்' என்பதே மொழியின் பயன்பாட்டை, அதாவது இலக்கிய மொழியைப் புலப்படுத்துகிறது. தொல்காப்பியமே சொல்லதிகாரத்தின் முதல் இயலான கிளவியாக்கத்தில் (18) 'வழக்காறு / செய்யுளாறு' என்று வேறுபடுத்தியதோடு வேறு பல இடங்களில் அந்த வழக்குகளைச் சுட்டிக்காட்டி விளக்கியுள்ளது. அதாவது, வழக்காறு பேச்சு வழக்கையும் செய்யுளாறு இலக்கிய மொழி வழக்கையும் குறிக்கிறது.

அடுத்த ஐந்து சூத்திரங்களில் (எச்சவியல் 2 –6) செய்யுள் ஈட்டச் சொற்களின் வகைகள் விளக்கப்பட்டுள்ளன.

இந்த வகைப்பாட்டில் வட சொல் என்பது சமஸ்கிருதத்தை மட்டும் அல்லாமல் பிராகிருதம், பாலி ஆகிய சமஸ்கிருதம் சார்ந்த மொழிகளையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது.

தொல்காப்பியம் வடமொழிச் சொற்களை விளக்கும்போது 'சிதைந்தன வரீஇயினும் இயைந்தன வரையார்' (6) என்று குறிப்பிட்டுள்ளதால் 'ஆணை, வட்டம், நட்டம், கண்ணன் எனப் பாகதமாகச் சிதைந்து வருவனவும் கொள்க' (6) என்ற சேனாவரையர் விளக்கத்தில் பாகதம் என்பது பிராகிருத மொழியைச் சுட்டுகிறது.

தமிழ்	சமஸ்கிருதம்	பாகதம்
ஆணை	ஆஞ்ஜா	ஆணா
வட்டம்	வ்ர்த்தா	வட்டா
நட்டம்	நஷ்ட	நட்ட
கண்ணன்	க்ருஷ்ணா	கண்ஹா

பிரயோக விவேகம் (2) இவைகளைப் பிராகிருதம் என்றே குறிப்பிட்டுள்ளது. உண்மையில் பிராகிருதம் என்பதன் சிதைந்த வடிவமே பாகதம்.

ஆணை என்ற வடிவமே தொல்காப்பியத்திலும் (உரியியல் 98.6) சங்க இலக்கியத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ் வரிவடிவங்கள் பிராமி வரிவடிவத்தின் தழுவலாக வரலாற்று ஆசிரியர்கள் விளக்குவது மொழியியலாளராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, வட மொழி என்பது சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி (பௌத்தர்களோடு தொடர்பு உடைய ஒரு வட மொழி) என்று மூன்று மொழிகளையும் குறிப்பதாகக் கொள்வது வரலாற்று நோக்கில் சரியானது.

வட மொழிச் சொல் என்பது வரலாற்று நோக்கு. அதனால் 'செய்யுள் ஈட்டச் சொல்லைப் பிறமொழிச் சொல், தாய் மொழிச் சொல் என்று பகுப்பது, சமூகவியல் நோக்கிலும் பயன்பாட்டு

நோக்கிலும் சில உண்மைகளைப் புலப்படுத்துகிறது.



<u>**இயற்சொல்**</u>

'இயற்சொல்' என்பதில் 'இயல்' என்பது நடக்கும், வழங்கும் என்ற பொருள் உடைய வினையடிச் சொல் அடியாகப் பிறந்த ஆக்கப் பெயர்; இயல்பு என்ற பொருளை உணர்த்தும். மொழியியல் நோக்கில் இயற்சொல் தகு வழக்கு/தகுவழக்குக் கிளைமொழி (standard dialect) என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது, மொழியில் வேறுபட்ட வழக்குகள் இருப்பதும் இவைகளில் ஒன்று இயல்பான வழக்கு என்ற கருத்தும் அடங்கியுள்ளது. அதற்கு ஏற்பத் தொல்காப்பியமே, திரிசொல், திசைச் சொல் என்று கூடுதல் இரண்டு வழக்குகளைக் குறிப்பிட்டிருப்பதும் நல்ல சான்று. இயற் சொல் என்பது மொழி பேசும் நிலம் முழுமையும் அறிந்த சொல் என்றும் கொள்ளலாம்.

'இயற் சொல் தாமே/செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித் தம் பொருள் வழாமை இசைக்கும் சொல்' (2) என்பது தொல்காப்பிய விளக்கம். இதில் இரண்டு கருத்துகள் அடங்கியுள்ளன: i. வழங்கும் நிலப்பகுதி ii. அதன் விளக்கம்.

'நாயை, ஞமலி என்ப பூழி நாட்டார் என்றக்கால், அச்சொல்லை எல்லா நாட்டாரும் உணரார். நாய் என்பதனையாயின் எவ்வெத்திசை நாட்டாரும் உணர்ப' என்பது முதல் உரையாசிரியரான இளம்பூரணர் விளக்கம். அதாவது நாய், இயற்சொல்; ஞமலி, திசைச் சொல். தொல்காப்பியமே திசைச் சொல்லை விளக்கும்போது (4) 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்' என்று குறிப்பிட்டுள்ளதால் மொத்தம் பன்னிரெண்டு நிலப்பகுதி இருப்பதும் அதில் ஒன்று செந்தமிழ் நிலம் என்றும் அறியமுடிகிறது.

தகு வழக்கு வழங்கும் நிலப்பகுதியைச் 'செந்தமிழ்' என்று குறிப்பிட்டுள்ளது இலக்கண நோக்கில் அந்தப் பகுதி செம்மையான மொழி பேசும் பகுதியாகக் கருதப்படுவதன் பிரதிபலிப்பு.

அது எந்தப் பகுதி என்பதில் உரையாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது.

'வையையாற்றின் வடக்கு, மருதயாற்றின் தெற்கு, கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு' என்பது இளம்பூரணரின் விளக்கம். அது, சோழ நாட்டின் தென்பகுதியாகக் கருதப்படுகிறது. ஆனால், நன்னூல் உரையாசிரியரான சங்கரநமசிவாயர் பாண்டியநாடுதான் செந்தமிழ்நாடு என்று குறிப்பிட்டுள்ளார்.

தேவநேயப் பாவாணர் பல இலக்கிய மேற்கோள்களை எடுத்துக்காட்டி பாண்டிய நாடு சங்க காலத்தில் செந்தமிழ் நிலமாக அமைந்திருக்க வேண்டும் என்று வாதாடியுள்ளார் (செ.வை. சண்முகம் 2008: 64). இந்தக் கருத்தே சரியானது என்று வரலாற்று நோக்கிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

உண்மையில் இயற் சொல் நிலப்பகுதி, அரசியல், சமூகப் பொருளாதாரச் சூழல் அடிப்படையில் அமையக் கூடியது. அதனால் அது மாறக் கூடியது என்பது ஒரு வரலாற்று உண்மை. அந்த முறையில், 'செந் தமிழ் நிலம்' என்பது சங்க காலத்தில் பாண்டிய நாடு என்றும் இடைக்காலத்தில் சோழ நாடு என்றும் தற்காலத்தில் தொண்டை நாடு அதாவது சென்னை வாழ் தமிழ் அறிஞர் வழக்கு என்றும் கருதப்படுகிறது.

திரிசொல்

'ஒரு பொருட்குறித்த வேறுசொல்லாகியும்

வேறுபொருட் குறித்த ஒரு சொல்லாகியும்

இருபாற் றென்ப திரிசொற்கிளவி'

(எச்சவியல்.3)

என்ற தொல்காப்பிய விளக்கம், அகராதியியல் நோக்கில் திரி என்பதன் வேர்ச் சொல்லின் பொருள் அடிப்படையில் கொடுத்தது போல் அமைந்துள்ளது.

அதனால், 'ஒரு கூறு இருப்ப ஒரு கூறு திரிதல்' என்று இளம்பூரணர் விளக்கி, கிள்ளை, மஞ்ஞை என்ற உதாரணத்தைக் கொடுத்துள்ளார். அதாவது, அவை கிளி/கிள்ளை, மயில்/ மஞ்ஞை என்று ஒப்பு நோக்கிக் கொடுத்த விளக்கம். அதுபோல உந்தி, அடுக்கல் என்பன முழுவதும் வேறுபடத் திரிந்தன என்பவை உந்தி / கொப்பூழ். மலை / அடுக்கல் என்பது ஒப்பு நோக்கு முறையில் அமைந்தவை. உண்மையில் அவை ஒரு பொருள் பல சொல் என்ற முறையில் மொழியியலில் இயல்பாக அமைந்தவை.

'திரிசொல் என்பது செய்யுள் இன்பம் நோக்கி அவ்வியற் சொற்களை அவ்வாய்பாடு திரித்து வேறுபட்ட வாய்பாட்ட (உள்ளபடியே) ஆக்கும் செய்யுளுடையச் சொல் .... திரிசொல் செய்யுட்கே உரிய.. ஒழிந்த மூன்றும் வழக்கிற்கு உரியவாகிச் (3) செய்யுட் புகும்' என்று எச்சவியல் முதல் சூத்திர இளம்பூரணரின் விளக்கம் மாறுபட்ட சிந்தனையின் வெளிப்பாடு.

திரி சொல் விளக்கச் சூத்திரத்தில் சேனாவரையரும் மேலே காட்டிய உதாரணங்களைக் கொடுத்து விளக்கிவிட்டு 'பல சொல் ஒரு பொருட்கு உரியவாதலும், ஒரு சொல் பல பொருட்கு உரியவாதலும் உரிச் சொல் முதலாகிய இயற்சொற்கும் உண்மையான் அது திரி சொற்கும் இலக்கணம் ஆமாறு என்னை?' என்ற கேள்வி எழுப்பிவிட்டு மூல ஆசிரியர் கூறினமையால் ஒருவித விளக்கம் கொடுத்து ஏற்றுக்கொண்டுவிட்டார்.

அதாவது, அந்த உதாரணங்கள் தவறு என்பதை உணர்ந்ததன் வெளிப்பாடு.

சேனாவரையர், எச்சவியல் சூத்திர முன்னுரையில் 'செய்யுட்கு உரிய சொல்லும் அவற்றது இலக்கணமும் அவற்றாற் செய்யப்பட்ட விகாரமும்' என்று கூறியதால் திரிசொல்லுக்கு இன்னொரு பெயர், 'விகாரம்' என்பதும் பெறப்படுகிறது.

எனவே, 'திரிசொல் என்பது செய்யுள் இன்பம் நோக்கி அவ்வியற் சொற்களை அவ்வாய்பாடு திரித்து வேறுபட்ட வாய்பாட்ட (உள்ளபடியே) ஆக்கும் செய்யுளுடைய சொல்...................... திரிசொல் செய்யுட்கே உரிய' என்ற இளம்பூரணர் கருத்து முக்கியத்துவம் பெறுகிறது.

எச்சவியலிலேயே (7) செய்யுள் ஈட்டச் சொற்கள் விளக்கத்தை அடுத்து சொற்களின் எழுத்து ஆறு வகையாகச் சொல் வடிவங்கள் (எழுத்து) மாறுவது குறிப்பிடப்பட்டுள்ளது

I. வலிக்கும் வழி வலித்தல் = மெல்லினம் வல்லினம் ஆதல் குறுங்கை என்பது குறுக்கை என்று ஐங்குறுநூறு (266. 2). 'சிறுகட் பன்றி...../ குறுக்கை இரும்புலி' வந்துள்ளது வலித்தல் விகாரம். எனவே, குறுங்/குறுக் என்ற திரிபு தொடையாக்கத்துக்கு அதாவது செய்யுள் இன்பத்துக்கு என்பது தெளிவு. (முந்தை, முத்தை தத்தம் கிளவி தம்மகப் பட்ட/முத்தை வரூஉம்... (தொகை மரபு 22.4/5) இந்தத் திரிபும் தொடையாக்கத்துக்கே உரியது.

ii. மெலிக்கும் வழி மெலித்தல் = (வல்லினம் மெல்லினம் ஆதல்) = குற்றியலுகரம், குன்றியலுகரம். (ஒன்றறி கிளவி.......... / குன்றிய லுகரத்து (கிளவியாக்கம் 8) 'லும்' (எச்சம்.7). இந்தத் திரிபும் தொடையாக்கத்துக்காகவே.

iii. விரித்தல் = தண்டுறைவன் , தண்ணந் துறைவன் (குறுந்தொகை 296.6) இது, தொடையாக்கத்துக்கு பயன்படவில்லை. குறளில் (524), பெற்றதால் என்ற சொல் 'பெற்றத்தால்' என்று அமைந்துள்ளது. அதற்குக் காரணம், 'சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகுதல் செல்வந்தான் / பெற்றத்தால் பெற்ற பயன்' என்பதால்

விரித்தல்அடி முற்று எதுகை அமைப்பதே.

IV. தொகுத்தல்(குறைத்தல்) = மழவரை ஓட்டிய, மழவர் ஓட்டிய (அகநானூறு 1.2)

எழுத்தெனச் சொல்லப்படுவ , எழுத்தெனப்படுப (நூன்மரபு 1.1). 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதுஆற்றாது / எழுவாரை எல்லாம் பொறுத்து' (குறள். 1032) = உழவுத் தொழில் செய்யமாட்டாது பிற தொழில்கள் மேல் செல்வார் யாவரையும் தாங்குதலால் உழுவார் உலகத்துக்கு ஆணி ஆவார். இங்கு, 'பொறுத்து' தொழில்பெயர் தாங்குதல் என்று பொருள். அது, மூன்றாம் வேற்றுமைக் கருவிப் பொருளில் வந்துள்ளதால் அந்த உருபு, பாட்டில் குறைந்துள்ளதால் தொகுத்தல் விகாரம் ஆகும்.

எனவே, இவை செய்யுளில் சொற்களின் திரிந்த வடிவம் அதாவது எழுத்து திரி சொல் என்று கொள்ளலாம். இளம்பூரணர் கூறியபடி திரிசொல் என்பது செய்யுள் இன்பம் நோக்கியதும் ஆகும்.

அதற்கு அடுத்த சூத்திரத்தில் (8) பொருள்கோள் என்பதை 'மொழி புணர் இயல்பு' என்று குறிப்பிட்டு அவைகளை விளக்கும்போது

'ஈரடி எண்சீர்' (எச்சம்.10) என்றும் '....அடிநிலைதிரிந்து / சீர்நிலை திரியாது' (எச்சம். 11) என்றும், 'ஈற்றடி இறுசீர்' (எச்சம்.12) என்றும் குறிப்பிடுவதால் 'மொழி புணர் இயல்பு' என்பதும் செய்யுள் மொழியில் ஏற்படும் தொடரியல் திரிவழக்காகக் கருதலாம். அதாவது, செய்யுளின் நேர் வடிவம் திரி வழக்கு; அதை இயல்வழக்காக மாற்றும் முறை மொழி புணர்இயல்பு.

'நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் / பண்புடை யாளர் தொடர்பு' என்ற குறளின் (783) இயல்பான மொழி அமைப்பு, 'பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு நவில் தொறும் நூல்நயம் போலும்' என்பதே. இது, முதலில் உவமையைக் கூறி அதன் உவமேயம் என்ன என்று அறியும் வாசகரின் ஆர்வத்தைத் தூண்டிக் கவிதையைத் தொடர்ந்து படிக்க

வைக்கும் உத்தி ஆகும். அதைத் தொடரியல் விகாரம் எனலாம்.

கருத்தாடலில் இயற்சொல், சுட்டுச் சொல் வழக்குப் பயன்பாடு பற்றிக் கிளவியாக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது. இயற்சொல் முதலும், அடுத்து, சுட்டுச் சொல்லும் வரும் என்று முதலில் (38) விளக்கிவிட்டு (முருகன் வந்தான், அவன் கொடுத்தான்) அடுத்த சூத்திரத்தில் 'முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது, கருத்தாடல் நோக்குத் திரிசொல் என்றும் கொள்ளலாம்.

'மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர் / சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'(65) என்பதும் 'மக்கள் ... அவர்' என்ற முறையில் அமைந்தது பொது நிலையில் அமைந்தது.

'அவன் அணங்கு நோய் செய்தான் ஆயிழாய் வேலன் / விறன்மிகுதார்ச் சேந்தன் பேர் வாழ்த்தி முகனமர்ந்து / அன்னை அலர்கடப்பந் தாரணியில் என்னைகொல் / பின்னை அதன்கண் விளைவு' (சேந்தன் அணங்கு நோய் செய்தான். அவன் பேர் வாழ்த்தி அலர்கடப்பந் தாரணியில் அதன்கண் விளைவு என்னைகொல்)என்பது உரையாசிரியர்கள் தரும் ஓர் உதாரணம். இங்குச் 'சேந்தன்' இயற்பெயர்; 'அவன்' சுட்டுப்பெயர். செய்யுள் என்பதால் சுட்டுப்பெயர் முதலிலும் இயற்பெயர் அடுத்தும் அமைந்துள்ளது திரிவழக்கு ஆகும். இங்குச் செய்யுள் இன்பம் காரணம் இல்லை. அது ஒரு கருத்தாடல்; அதாவது தோழியிடம் தலைவி கூறுவது என்பதால் 'அவன் அணங்கு நோய் செய்தான்' என்று முதலில் கூறும்போது அவன் யார் என்று அறிய ஆர்வம் ஏற்படும். கருத்தாடல் நோக்கில் ஆர்வ எதிர்பார்ப்பு (supense) உத்தியே திரிவழக்குக்குக் காரணம் ஆகும்.

'அதுகொல் தோழி காம நோயே / வதிகுருகு உறங்கும் இன்னிழற் புன்னை / உடைதிரைத் திவலை அரும்புந் தீநீர் / மெல்லம் புலம்பன் பிரிந்தெனப் / பல்லிதழ் உண்கண் பாடொவ் வாவே' (குறுந்தொகை 5ஆம் பாடல்). இங்கு, 'அதுகொல் தோழி காம நோயே' (தலைவன் பிரிந்ததால் கண் மூடவில்லை; தூக்கம் வரவில்லை) என்று முதலில் கூறிவிட்டு மெல்லம் புலம்பன்

பிரிந்தெனப் / பல்லிதழ் உண்கண் பாடொவ் வாவே' என்று, காரணம் அடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அது தான் காம நோயின் விளைவா என்பது பொதுக் கருத்தாடல். இங்கு முதலில் சுட்டுத் தொடர் காரணத்தை விளக்குவது. கண்மூடவில்லை என்ற காரியமும் கூறப்பட்டுள்ளது இயற் சொல் என்று ஆகிறது. அதாவது, கவனமாகக் கேட்கச் செய்யும் ஆர்வ உத்தி என்ற கருத்தாடல் உத்தி. ஒரு பொருள் பல சொல் போல ஒரு அடிப்படைக் கருத்தை உணர்த்தும் இரண்டு வாக்கிய அமைப்பை தொடரியல் திரி வழக்கு என்ற முறையில் கொள்ளலாம். எனவே, திரிவழக்கு பல வகையிலும் பல காரணங்களுக்காகவும் செய்யுளில் அமையும் கருத்தாடல் உத்திகளாகக் கருதலாம். செய்யுள் ஈட்டச் சொற்களில் ஒன்றாகத் திரிசொல் குறிப்பிட்டாலும், அது, செய்யுளில் திரித்து வழங்கப்படும் வழக்கு என்ற முறையில் தனி வகையாகவும் அமைகிறது.

பிற்காலத்தில் அது விகாரம் எனக் குறிப்பிடப்படுகிறது (யாப்பருங்கலமும், 95), இளம்பூரணர், எச்சவியல்7).

இந்த நோக்கில் பார்க்கும் போது தொல்காப்பியம் கூறிய இரண்டு வகைக்கும் I.ஒரு பொருள் குறித்த வேறு சொற்கள், II.வேறுபொருள் குறித்த ஒரு சொல் அமைந்த உதாரணங்கள் கடவுளைக் குறிக்கும் சொற்களாக ஆதிபகவன் (1), வாலறிவன் (2) மலர்மிசை ஏகினான் (3)அறவாழி அந்தணன் (8), எண்குணத்தான் (9)ஆகியவை திருவள்ளுவர் படைத்துக்கொண்டவை; ஒருவழியில் திரித்துக் கொண்டவை.

ii. வேறுபொருள் குறித்த ஒரு சொல்

தொல்காப்பியமே வேற்றுமை மயங்கியலில் (9) 'நோக்கல் நோக்கம்' என்று குறிப்பிட்டுள்ளது. 'நோக்கு' என்பதன் நேரடிப் பொருள் பார்த்தல் (See). நோக்கல் நோக்கம் எதிர்பார்த்தல் (expect). இது ஒரு வகையில் பொருண்மையியல் நோக்கில் திரிசொல்: நோக்குதல் = பார்த்தல் 'நோக்கினாள் நோக்குஎதிர்

நோக்குதல் தாக்கணங்கு / தானைக் கொண்டது உடைத்து' (குறள் 1082, என்னைப் பார்த்தபின் என் பார்ன வக்கு எதிர் நோக்குதல் பெரிய தெய்வம் உடைய படையுடன் தாக்குவது போலும்). இங்கு, நோக்கு = இயல் வழக்கு. 'நோக்கல் நோக்கம்' = கருதுதல், எதிர்பார்த்தல். 'அறனோக்கி ஆற்றுங்கொல் வையம் புறனோக்கிப் / புன்சொல் உரைப்பான் பொறை' (குறள், 189, அறன் என்று கருதி, புறஞ் சொல்வாரை இந்த உலகம் சுமக்கிறது போலும் = கருதுதல். 'வானோக்கி வாழும் உயிரெல்லாம் மன்னவன் / கோல்நோக்கி வாழும் குடி'(குறள். 542) உலகமக்கள் மழையை எதிர்பார்த்து வாழ்வது போலக் குடி மக்கள் அரசன் செங்கோல் ஆட்சியை எதிர்பார்த்து வாழ்வார்) எதிர்பார்ப்பு.

பொருண்மையியல் நோக்கில் நோக்கு என்பது 'நோக்கு' என்ற நேர்ப்பொருளிலும் 'நோக்கல் நோக்கு' என்று திரி பொருளிலும் வழங்குவது 'நோக்கு' இரண்டு பொருள்படும் என்பதைத் தொல்காப்பியம் கவனித்ததன் விளைவே இந்தச் சூத்திரம். நோக்கல் நோக்கம் என்பது கவித்துவ நோக்கு உடைய திரிசொல் என்று கொள்ளலாம்.

பொருண்மையியல் நோக்கில் இது ஒரு சொல் பல பொருள் (homonymy) அல்ல ஒரு சொல்லின் சிறிது மாறுபட்ட பல்பொருண்மைச் சொல் (polysmey) ஆகும். உண்மையில் இந்த முறை, பேச்சு வழக்கிலும் காணப்படுகிறது. ஒருவர் வீட்டுக்கு வந்தார் என்று சொல்லும்போது வா என்பது வினையைக் குறிக்கும். ஆனால் மழை வந்தது என்பது மழை பெய்யத் தொடங்கியது என்று பொருள். அதுபோலக் குழந்தை நடக்கிறது என்ற தொடரில் நட என்பது உண்மையான பொருளைக் குறிக்கிறது. ஆனால், திருமணம் நடக்கிறது என்று கூறும்போது திருமண நிகழ்வுகள் நடக்கிறது என்று ஒன்றன்பின் செயல்படுகிறது என்று பொருள். அப்படியானால் புலவர் திட்டமிட்டு செய்யும் பொருள் மாற்றத்தைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். 'ஈன்ற பொழுதில் பெரிதுஉவக்கும் தாய்' (குறள்.69) ஈன் என்ற வினைஇயல்பானது. ஆனால், சிறப்புஈனும், செல்வமும் ஈனும் அறத்தினூங்கு / ஆக்கம் எவனோ உயிர்க்கு (குறள்.31) என்ற

குறளில் தரும் என்று பொருள்பட்டாலும் அதன் பொருள் சிறப்பு அதிகம்.

வட மொழியில் வக்ரோத்தி என்றும் ஆங்கிலத்தில் டிவியேஷன் (Deviation) என்றும் திரிசொல் குறிப்பிடப்படுகிறது வடமொழியில் வக்ரோத்தி ஜீவிதம் அதாவது விகாரம் உயிர் என்று குறிப்பிடப்பட்டு அந்தத் தலைப்பில் ஒரு தனி நூலே வந்துள்ளது(குந்தகன், வக்ரோதி ஜுவிதம். ஐயப்பப் பணிக்கர் 2012; 74-84). 'அது ஒரு அழகியல் அடையாளமாகவும் கருதப்படுகிறது. தொனியும் குணமும் வக்ரத்தின் பிரிவுகளே; கவிதை, வக்ரத்தின் மூலமாகவே சிறப்படைகின்றது; வேறுபடுகின்றது என்றும் குந்தகன் கூறியுள்ளார். அவர் ஆறு வகையான வக்ரங்களைக் குறிப்பிட்டுள்ளார். அவையாவன: 1. எழுத்து, 2. சொல், 3. வாக்கியம், 4. அணி, 5.பிரகரணம் (கதைப் பகுதியில் வேறுபாடு செய்வது),6.பிரபந்தம் (நிகழ்ச்சிகள், காட்சிகள், பாத்திரங்கள், உரையாடல்கள், வருணனைகள், சுவைகள், நடைகள், தலைப்பு).

தொல்காப்பியம் அகராதி நிலையில் மட்டும் திரிசொல்லின் விளக்காகக் கூறினும் அதுவே வேறு பல வகைகளில் திரிவழக்கு இருப்பதைக் குறிப்பிட்டுள்ளதும், பிற மொழிகளிலும் ஒத்த கருத்து விரிந்த நிலையில் பேசுவதாலும் தமிழிலும் திரிசொல் கருத்தமைவு இங்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் செய்யுள் வழக்காகக் குறிப்பிட்ட இன்னொன்று தொல் வழக்கு என்று பொதுமைப்படுத்தப்பட்டுள்ளது.

தொல் வழக்கு

'தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே' (உயிர் மயங்கியல் 35.3) 'தொல்லியல் மருங்கின் மரீஇய மரபு' (புள்ளிமயங்கு 60) என்று செய்யுள் வழக்கில் இன்னொரு உள் வகையைக் குறிப்பிட்டுள்ளார். பொதுவாகத் 'தொன்னெறி'(வேற்று மயங்கு 18), 'தொன்னெறி மரபு' (வேற்றுமை மயங்கியல் 27), 'தொன்னெறி மொழி' (எச்சம்.53.3) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது செய்யுள்

ஈட்டச் சொற்களில் இன்னொரு கூடுதல் வழக்கு என்று கொள்ள வேண்டும்.

இலக்கிய மொழியியல் நோக்கில் தொல்வழக்கு என்று குறிப்பிடப்பட்டு எல்லா இலக்கியத்திலும் தொல்லியல் வழக்கு அமைந்துள்ளது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டு பாரதியார் பாடலிலும் தொல்வழக்கு அமைந்துள்ளது எடுத்துக்காட்டி அதற்கான காரணமும் விளக்கப்பட்டுள்ளது (செ. வை.சண்முகம், 2019:72 தொ.).

தொண்டு = ஒன்பது, தொல்காப்பியம் செய்யுளியல் 100.3

நால்கு = நான்கு, அகநானூறு 104.6

சிறுக்கன் = சிறுவன் (குறுந்தொகை 45.4) பெரியாழ்வார் திருமொழி

தொல்திராவிடம் கிறுக்கன் (தற்கால பேச்சு மொழியில்) பொருள் மாற்றம்.

நீம் (முன்னிலைப் பன்மை) சீவகசிந்தாமணி (1932.3) சங்க இலக்கியம் நீயிர்

தெரிகிலன் யான் = அறியவில்லை, பாரதி, குயில் பாட்டு, 135.

<u>திசைச் சொல்</u>

திசை என்பது வடக்கு, தெற்கு, குணக்கு (கிழக்கு), குடக்கு (மேற்கு) என்று நாலு திசையைக் குறிக்கும் சொல்லாகத் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திலும் (உருபியல் 29, குற்றியலுகரப் புணரியலிலும் 26) பயன்படுத்தப்பட்டுள்ளது.

திசைச்சொல்லைச் செய்யுள் ஈட்டச் சொற்களில் ஒன்றாகக் குறிப்பிட்டு 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்' (4.1) என்று விளக்குவதால், திசைச்சொல் கிளைமொழி வழக்குகள் (dialects) என்று பொதுவாகவும், வட்டாரக் கிளை மொழி வழக்குகள் (regional dialects) என்று சிறப்பாகவும் கொள்ளப்படுகிறது.

தொல்காப்பியம் பன்னிரண்டு நிலம் எது என்று குறிப்பிடாததால்

உரையாசிரியர்கள் தந்த விளக்கத்தில் கருத்து மாறுபாடு காணப்படுகிறது.(விரிவான விளக்கத்துக்கு: செ.வை.சண்முகம் 2008:78). இங்கு நாம் முக்கியமாகக் கருதவேண்டியது இயற் சொல்லொடு கிளைமொழி வழக்குகளையும் செய்யுளிலும் பயன்படுத்தலாம் என்ற முறையில் செய்யுள் ஈட்டச் சொல்லாகக் குறிப்பிட்டதன் உட்கிடை சிறப்பானது.

இளம்பூரணர் குறிப்பிட்ட நாய் என்ற இயற்சொல் சங்க இலக்கியத்தில் இருபத்தைந்து இடங்களிலும் ஞமலி பன்னிரெண்டு இடங்களிலும் வந்துள்ளது (பாண்டியராஜா மின் அகராதி) இயற் சொல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டதற்கு இது ஒரு சான்று.

தொல்காப்பியமே பல உறழ்ச்சி வழக்குகளைப் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளது. அவைகளில் திசைச்சொல்லும் அமைந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

அவைகளில் 'பனியென் வருஉம் கால வேற்றுமைக்கு / அத்தும் இன்னும் சாரியை ஆகும்' என்ற சூத்திரப்படி (உயிர் மயங்கியல் 39). பனியிற் கொண்டான் ~ பனியத்துக் கொண்டான் என்று இரண்டு வழக்குகள் அமைகின்றன.

ஆனால், சங்க இலக்கியத்தில் வேற்றுமை அல்லது சாரியை பெறாத பெயர் வடிவமே 233 முறைகள் பதிவாகியுள்ளது (பாண்டியராஜா, – மின்னகராதி)

ஆனால், பனியிற் கொண்டான் என்பது இயல்பான வழக்கு என்றும், பனியத்துக் கொண்டான் என்பது இன்றும் மலையாளத்தில் வழங்குவதால் அன்றைய சேரநாட்டு வழக்காக இருக்கும் என்றும், வையாபுரிப்பிள்ளை (1948:18) விளக்கியுள்ளார். அதாவது, அத்து சாரியை வழக்கு திசைச்சொல் வழக்கு.

தேன் என்ற சொல் தேன், தேற், தேக், தேங் என்ற நாலு வடிவம் பெறும் (புள்ளிமயங்கியல் 45,46) என்று விளக்கப்பட்டுள்ளது. உண்மையில் அவை தேன்/ தேம் என்ற அடிநிலைக்கிளவி பெற்று, வருமொழி வல்லினம் இரட்டித்தல் இயல்பு என்ற (மரம் + கிளை --->, மரக்கிளை, மரம் பெரிது) புணர்ச்சி மாற்றத்தால்

ஏற்பட்டிருக்க வேண்டும். அதாவது, சொல் நிலையில் மட்டும் அல்லாமல் எழுத்து நிலையிலும் புணர்ச்சி நிலையிலும் திசை வழக்கு அமையும் என்பது மொழியியல் உணர்த்தும் உண்மை. அதைத் தொல்காப்பியம் உறழ்ச்சி என்ற முறையில் மட்டுமே குறிப்பிட்டுள்ளது.

'மகரத் தொடர் மொழி மயங்குதல் வரைந்த / னகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப/ புகரறக் கிளந்த கிளவி மேன' என்று மகரமும் னகரமும் உறழ்ச்சியாக அமையும் மொழி மரபு இறுதி சூத்திரத்தில் (49) / குறிப்பிட்டது எழுத்து நிலையில் திசைவழக்கே. அப்படியே புள்ளிமயங்கியலில் மகர ஈறு சூத்திரங்களில்(17) 'மெல்லெழுத்து உறழும் மொழியுமாருளவே / செல்வழி அறிதல் வழக்கத்தான' என்பது உறழ்ச்சி பற்றியது தான். குளங்கரை ~ குளக்கரை. இது ஒரு திசை மொழி வழக்கு என்பது தேன் என்றசொல்லின் எழுத்து மாற்றத்தாலும் உறுதி ஆகிறது.

கிளைமொழியியல் ஆய்வு அடிப்படையில் நாலு கிளை மொழி இருந்ததாக இன்று கருதப்படுகிறது (செ.வை.சண்முகம். 2019).

சமூகக் கிளைமொழி

தொல்காப்பியம் எச்சவியலிலேயே குறிப்பிட்ட ஒரு வகைச் சொற்களில் சமூகக் கிளைமொழி என்ற கூடுதல் வகையும் அமைந்துள்ளது.

இரத்தல் பொருளைக் குறிக்கும் ஈ, தா, கொடு என்ற மூன்று சொற்கள் அடிப்படையில் ஈ என்ற இழிந்தோர் கூற்று (49 (அதாவது இழிந்தோர் உயர்ந்தோரிடம் கேட்பது), கொடு உயர்ந்தோர் கூற்று (51) (அதாவது உயர்ந்தோர் இழிந்தோரிடம் கேட்பது), தா என்பது ஒப்போர் (50) (அதாவது இழிந்தோர் இன்னொரு இழிந்தோரிடமும், உயர்ந்தோர் இன்னொரு உயர்ந்தோரிடம் கேட்பது) என்று விளக்கப்பட்டுள்ளது.

<u>மரூ</u>

பேச்சு வழக்கில் அதிக மாற்றம் அடைந்த சொற்கள், புணர்ச்சியில் மாற்றம் ஆகியவை மரூ என்ற ஒரு வகையாக அடையாளம் கொடுக்கப்பட்டுள்ளது.

'வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்' (குற்றியலுகரப் புணரியல். 78.2) என்று 'வழக்கில் மரூ' என்ற இன்னொரு உள்வகை குறிப்பிடப்பட்டுள்ளது. 'மருவின் தொகுதி மயங்கியல் மொழி / உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே'. (புணரியல் 9) என்பதை மருவின் பொதுக் கோட்பாட்டை விளக்கும் சூத்திரமாகக் கொள்ளலாம். (செ.வை.சண்முகம், 2018).

ஆதன் + தந்தை > ஆந்தை, (தொல். புள்ளி மயங்கு.53)

கல்யாணம் > கண்ணாலம் (பாரதி, குயில்பாட்டு, 260)

இன்றைய பேச்சு மொழியில் நிறைய மரூ வழக்குகள் அமைந்துள்ளன.

செயங்கொண்டம் > சேங்கணம், இன்றைய பேச்சு வழக்கு

<u>**வட சொல்**</u>

'வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே' (5)

'சிதைந்தன வரீஇயினும் இயைந்தன வரையார்' (6)

என்று இரண்டு சூத்திரங்கள் உள்ளன. உரையாசிரியர்கள் அனைவரும் இரண்டு மொழிக்குக்கும் பொதுவான எழுத்துகளால் ஆன சொல் என்று கொண்டு, வாரி, குங்குமம் முதலிய சொற்களை உதாரணமாகக் கொடுத்துள்ளார்கள். அவை, பிரயோக விவேகமும்(2) பிற திராவிட இலக்கணங்களும் குறிப்பிடும் தற்சமம் என்ற வகை ஆகும்.

தற்சமம் என்பது வடமொழி நீக்க வேண்டும் என்பதற்கு

அதை ஒத்த இணையான தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்தும் முறையையும் குறிக்கும். தேஷ என்பதைத் தேயம் (அகத்திணை.40.3) என்று பயன்படுத்தியுள்ளது

தொல்காப்பியத்திலேயே அந்தம் (கிளவியாக்கம் 4) , மாத்திரை (நூன்மரபு 7), கருமம் (வேற்றுமை மயங்கியல் 1) ஏது (வேற்றுமையியல் 13.7), குஞ்சரம் (மரபியல், 19) ஒட்டகம் (மரபியல் 18) உள்ள முதலிய வட மொழிச் சொற்கள் தற்சமச் சொற்கள் ஆகும். இந்தக் கருத்து பிரயோக விவேகம் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது சூத்திரம் வட மொழி எழுத்துகள் அதிக மாற்றம் அடைந்து வருவதைக் குறிக்கும். உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளது பாகதச் சொற்கள் ஆகும். தொல்காப்பியம் குறிப்பிட்ட திங்கள் (மாதப் பெயர்கள், உயிர் மயங்கியல் 48.84), நாள் (27, நட்சத்திரம் உயிர் மயங்கியல் 47 / 84) பெயர்களும் வடமொழிச் சொற்களாகவே, கருதப்படுகின்றன. அதைப் பிரயோகவிவேகமும் (2) பிற திராவிட மொழி இலக்கணங்களும் தற்பவம் என்று குறிப்பிடுவது அறியத் தகுந்தது.

தொல்காப்பியம் வட மொழிச் சொற்களைப் பயன்படுத்தியதோடு அவைகளை இலக்கிய வழக்கிலும் கையாளப்படுவதாய் செய்யுள் ஈட்டச் சொற்களில் கூறியது அவரது அறிவுணர்வின் வெளிப்பாடு.

தெலுங்கு

பொது ஆண்டுக்குப் பின் 13ஆம் நூற்றாண்டில் கேத்தனா என்பவரால் எழுதப்பட்ட ஆந்திரபாஷா பூஷணத்துக்கு ('தெலுங்கு மொழியின் அணிகலன்' என்று பொருள்) தெலுங்கு மொழியைத் தரவாகக் கொள்ளப்பட்டுள்ளது (Subrahmaniyam. 1985).

தெலுங்கு மொழிச் சொற்களைத் 1) தற்சமம், 2) தற்பவம், 3) அச்ச தெலுகு, 4) தேசியம், 5) கிராமியம் என்று ஐந்து வகைப்படுத்தப்படுத்தி அவைகளுக்கு உதாரணங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன.

1) **தற்சமம் :** வனமு (காடு), தனமு (செல்வம்), தேனுவு (பசு), புருஷுடு (மனிதன்)

2) **தற்பவம்:** ஆகாஸ (skt), ஆகஸமு (telugu) (ஆகாயம்), சந்த்ர (skt) சந்துருடு (telugu) (சந்திரன்), குட்யம் (skt) கோட (telugu) (சுவர்).

3) அச்ச தெலுகு = தல (தலை), நெல (மாதம்), வேசவி (கோடை) முதலியன.

4) **தேசியம்** = எல்லாருக்கும் தெரிந்த சொற்கள்:

I. எருக்குவ (அறிவு), i) பெத்தமி (முழுத்தாமரை) - தனிச் சொற்கள்

ii வல ராஜூ (மன்மதன்) ரேறேடு (நிலா) - தொகைச்சொற்கள்

iii. நொசலு (நெற்றி), வென்னு (முதுகு), மண்ணு (மண்) -- சாதாரணச் சொற்கள் செய்யுளில் பயன்படுத்தும் தாய் மொழிச் சொற்கள் என்னும் பொதுவான சில சொற்கள் ஆகும்

i எ. கிராமியம் = ஈடு (-வீடு 'இவன'), ஏதாவது, என்றாவது (-வேதமுலு 'வேதங்கள்') குத்த (குதம்) -அவையல் கிளவி. உயர்வழக்கல்லாத பேச்சு வழக்கில் மாறி வருவனவும் அவையல் கிளவி ஆகும்.

1) தற்சமம் ஒழிந்த நாலு வகைச் சொற்களையும் அச்ச தெலுகு என்று அழைக்கலாம் என்றும் 2) கிராமியம் ஒருவராலும் ஒத்துக்கொள்ளப்படாத வழக்கு என்றும் பிறரைக் குறை கூறும்போது பயன்படுத்தப்படும் வழக்கு என்று கேத்தன்னா குறிப்பிட்டுள்ளது (சூ.27) விளக்கத்துக்கு உரியது.

தற்சமம் பற்றியக் கருத்து வடமொழியை அப்படியே தழுவிய உச்சரிப்பும் பயன்பாடும் ஒரு வித மேனிலை உணர்வின் வெளிப்பாடாகப் புரிந்து கொண்டு பொதுவானத் தெலுங்கு பேசும் மக்களிடமிருந்துப் பிரித்து, தனித்துவப்படுத்தும் வழக்கை ஏற்றுக்கொள்ளவில்லை என்று ஆகிறது. அதே சமயத்தில் கிராமியம் பற்றி கருத்து படிக்காதவர்கள் பேச்சு என்பது போல் ஆகி, தாழ்நிலையாகப் பிறரால் புறக்கணிக்கப்படுவதையும்

புலப்படுத்துகிறது. இரண்டும் கேதனாவின் அல்லது அன்றைய தெலுங்கு பரவலாகக் காணப்பட்டச் சமூக மொழி உணர்வின் வெளிப்பாடு. அதே சமயத்தில் அந்த இரண்டு வகைகளையும் சொல்வகையில் இலக்கண ஆசிரியர் என்ற முறையில் விளக்க முறை ஆய்வாளராக அன்றைய தெலுங்கு சமூகத்தில் காணப்பட்ட வழக்குகளை இனம் கண்டு அடையாளப்படுத்தியுள்ளார் என்ற கருத்தும் புலனாகிறது.

ஆந்திர சப்த சிந்தாமணி என்ற வட மொழியில் எழுதப்பட்ட பொ.ஆ. 15ஆம் நூற்றாண்டில் இலக்கணம் 1) தஜ்ஜா, 2)சமா, 3) தேசியம், 4) கிராமியம் என்று நாலு வகைப்படுத்தியுள்ளது (சூ.46) எழுத்துப்படலத்திலும் கிராமியம் (9, 10), தேசியம் (18) குறிப்பிடப்பட்டுள்ளது அறியத் தகுந்தது.

இந்த நூலே காலத்தால் முந்தியது (11ஆம் நூற்.) என்ற கருத்து தெலுங்குமொழி அறிஞர்களிடம் காணப்படுவதும் சுட்டிக்காட்டத் தகுந்தது. ஆனால், அதற்கு உரைகள் பொது ஆண்டு பதினேழாம் நூற்றாண்டிலிருந்து காணப்படுவது பிற்காலம் என்பதற்கு ஒரு சான்று.

தஜ்ஜா = தற்பவம்; சமா = தற்சமம்.

தேசியம் = நீரோட்டம் போல் இயல்பாகவும் நாள்தோறும் பயன்படுத்தக் கூடியச் சொற்கள்

கிராமியம் = எந்த விதியையும் பின்பற்றாத சொற்கள்.

இவருடைய தேசியம் கேத்தன்னாவின் தேசியமும் அச்ச தெலுகும் அடங்கும்.

பொதுவாகத் தெலுங்கு இலக்கணங்களின் வகைப்பாடுகளைத் தெலுங்கு, வட மொழி என்று இரண்டு பெரும்பிரிவாகப் பிரித்து, முன்னதில், தேசியம், கிராமியம் என்ற இரண்டு வகையும் பின்னதில் வட சொல்லில் தற்பவமும் தற்சமமும் அடங்கும்.

ஆனால் கேத்தன்னா தற்சமம் ஒழிந்தவைகளை அச்ச தெலுங்கு என்றும் கொள்ளலாம். இது, அவருடைய மொழி உணர்வின் வெளிப்பாடு தேசியம் என்பதைத் தமிழின் இயற்சொல்லோடும் கிராமியம் என்பதைத் திசைச் சொல்லோடும், தற்பவம், தற்சமம் ஆகிய இரண்டையும் வடசொல்லொடும் இணைத்துப் பார்க்கலாம்.

இவருடைய கருத்தைக் கீழ்க் கண்டபடி விளக்கலாம்



கன்னடம்

முதல் இலக்கணம் கவிராஜமார்க்கா (பொ.ஆ.9ஆம் நூற்றாண்டு) பெயருக்கு ஏற்ப அணி இலக்கணம் ஆனாலும் மொழி இலக்கணம் பற்றியக் குறிப்புகளில் கிளை மொழிகளைக் கன்னடங்கள் என்றும் தற்பவம், தற்சமம் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

14ஆம் நூற்றாண்டில் கேசிராஜா என்பவரால் கன்னட மொழியில் எழுதப்பட்ட 'சப்தமணிதர்ப்னா' வின் (சப்தம் = சொல், மணி தர்பனா கண்ணாடி அதாவது மணியாகிய சொற்களின் கண்ணாடி, சொற்களின் அமைப்பைப் பிரதிபலிப்பது என்று கொள்ளலாம்) கருத்துகள். அதில் சொற்களைத் தனியே பாகுபடுத்திப் பேசாவிட்டாலும்

1) **சமசமஸ்கிருதா (சூ. 60. 92-97),**

2) **அப பிரம்சா (சூ. 266),**

3) தற்சமா (சூ. 312, 313),

4) தேசியம் (சூ. 314),

5) கிராமியம் (சூ. 38)

ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. கிராமியர்கள் ழகரத்தை ளகரமாக உச்சரிக்கிறார்கள் (சூ.38) என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர கிராமியம் என்று பொதுமைப்படுத்தவில்லை.

அப பிரம்சா என்பதைத் தற்சமம் என்று கொண்டு, தற்சமா என்பதற்குப் புது விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அப பிரம்சா = தற்பவம், சமஸ்கிருதா = (தற்சமம்) (காமம், வசந்தம், பீமம்).

ஆசிரியர் கருத்துப்படி, தற்சமம் என்பதைக் கன்னடத்துக்கும் வட மொழிக்கும் பொதுவானது என்று கூறி தொகுத்துக் கொடுத்துள்ளார். மணி, மஞ்சம், பட்டம், தோரணம், அட்டம், கோணி (go:Ni), சபளம், அங்க்கம் (ankkam).லதெ, கங்ஙக்கணம், கோண்ட்டெ, அங்கணம், பலம் (balam), பிலம் (bilam), பந்தி (bandhi) மாலெ, காளம் (ga:Lam), கடம் (gaDam), கல்லம் (gallam), மல்லம், தளம் ஆகியவை. அவை கன்னடத்துக்கும் வட மொழிக்கும் பொதுவானவை என்பதன் உட்கிடை என்ன. வடமொழியிலிருந்து கடனாளப்பட்டச் சொற்கள் என்றால் சமசமஸ்கிருதச் சொற்கள் ஆகும். ஆனால், அப்படிக் குறிப்பிடாததால் கன்னட மொழியிலிருந்து சமஸ்கிருதம் கடனாண்ட சொற்கள் என்பது கன்னட அறிஞர்கள் கருத்து (Kulli. 1976: 238). அப்படியானால் கன்னடசமா என்று பெயரிட்டிருக்க வேண்டும்.

எல்லாரும் 19ஆம் நூற்றாண்டு வரை இந்திய அறிஞர்கள் எல்லோரும் எல்லா இந்திய மொழிகளுக்கும் வட மொழியே தாய் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். அந்த நிலையில் கேசி ராஜா இருபத்தொரு சொற்கள் கன்னட மொழியிலிருந்து வட மொழி கடனாண்டது என்று நேராகக் கூறாமல் கன்னடத்துக்கும் வட மொழிக்கும் பொது என்று கூறியதன் மூலம் அவை வடமொழியிலிருந்து கடனாளப்பட்டச் சொற்கள் என்று

கூறாமல் கூறியது பாராட்டப்பட வேண்டியது. உண்மையில் அவை வட மொழி கடனாண்ட சொற்களா? தற்காலிக ஒற்றுமை (Accidental Similarities) என்று வரலாற்று மொழியியல் நோக்கில் ஆராயப்பட வேண்டும்.



<u>மலையாளம்</u>

பொ.ஆ. 14ஆம் நூற்றாண்டில் வடமொழியில் எழுதப்பட்ட இலக்கணமே லீலாதிலகம். மலையாள மொழியின் முதல் இலக்கணம். அதற்கு உரையும் சேர்ந்தே கிடைக்கிறது. அது இருபதாம் நூற்றாண்டில்தான் கண்டறியப்பட்டது.

இது தமிழ், ஆந்திரபாஷா (தெலுங்கு), கர்நாடக பாஷா (கன்னடம்) குடகு மொழிகளைக் குறிப்பிட்டு, தமிழைச் சில இடங்களில் சோள பாஷா, பாண்டிய பாஷா என்றும், சில இடங்களில் கேரளபாஷையைத் தமிழ் என்றும் குறிப்பிட்டுள்ளது.

‘கேரளர்கள் திராவிடர்கள் ஆனதால் அவர்களது மொழியாகிய திரமிடம் என்ற திரிந்த வடிவமாகிய தமிழ் என்ற பெயரை வழங்குகின்றார்’ (சூ.1 உரை).

சோள, கேரள பாண்டிய மக்கள் திராவிடர்கள் என்பது எல்லாரும் அறிந்த ஒன்று. கர்நாடக மக்களும் தெலுங்கரும் திராவிடரே என்று சிலர் சொல்கின்றனர். அக்கருத்து சரியன்று. அவர்களுடைய மொழி திராவிட வேதமாகியத் திருவாய்மொழியிலிருந்து வேறுபட்டதாகும். திராவிட சங்காதத்தை (எழுத்து மாலை) அவர்கள் படிப்பது இல்லை என்பவை முதல் சூத்திர உரைக் கருத்துகள்.

அவருடைய உண்மையான நோக்கம் மலையாளம் என்பது தனிப்பட்ட (independent) மொழி என்று நிறுவுவதே. அதற்காக மணிப்பிரவாளம் என்ற மலையாள இலக்கிய வகைக்கு இலக்கணம் எழுதப்பட்டுள்ளது.

அதன் முதல் சூத்திரமே 'பாஷா ஸமஸ்க்ருத யோகோ மணிப்பிரவாளம்' கேரளபாஷாவும் சமஸ்கிருதமும் இணைந்தது என்ற மணிப்பிரவாளம் என்பதன் விளக்கம் மொழி அடிப்படையில் அமைந்தது.

முதல் சூத்திர உரையில்தான் பாஷாவில் உள்ள சொற்களை தேசி, சமஸ்கிருத பவா (தற்பவம்), சமஸ்கிருத சமா (தற்சமம்) என்று மூன்று வகைப்பாடு காணப்படுகிறது.

தேசி என்பதற்கு இடுகுறிச் சொற்கள் என்று கூறி(சூ.13) உரையில், 'பிறிதொன்றைச் சாராமலும் நிமித்தம் இல்லாமலும் வழங்குவதற்குக் கற்பிக்கப்பட்டவை' என்று குறிப்பிட்டுள்ளது.

பாஷா சொற்களைத் தேசி, சமஸ்கிருத பவா (தற்பவம்), சமஸ்கிருத சமா (தற்சமம்) என்று மூன்று வகைப்பாடு செய்தது ஒரு வித வரலாற்று நோக்கு உடையது.

தற்பவம் என்பதைச் சமஸ்கிருத பவா, தற்சமம் என்பதைச் சமஸ்கிருத சமா என்று கூறியது லீலாதிலகம் சொல்லாக்கத்தில் வாசகருக்குத் தெளிவு ஏற்படும்படி செய்தது ஆகும். இந்தப் பாகுபாடு, கன்னடம், தெலுங்கு மொழிகளில் காணப்படுவதுதான்.

ஆனால் தேசி சொற்களைச் சுத்தம், பாஷாந்திர பவா, பாஷாந்திர சமா என்ற மூன்றாகப் பகுத்தது (சூ.14) புதுமையே. அதாவது, வடமொழிச் சொற்களைக் சமஸ்கிருத பவா, சமஸ்கிருத சமா என்று பெயரிட்டதே புதுச் சிந்தனையின் வெளிப்பாடு.

உரையில் சுத்தம் என்பதற்குக் கொச்சு (குழந்தை அல்லது சிறியது), முழம், நொடி என்று மூன்று உதாரணம் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளை மலையாளத்துக்கே உரிய சிறப்பு என்றும் பிற திராவிட மொழிகளில் இல்லாத சொல் என்றும் ராமஸ்வாமி (1944: 25) விளக்கியுள்ளார்.

பாஷாந்திரபவா என்பதைப் பிற மொழியிலிருந்து தோன்றி மாறுபட்ட வடிவம் உடையது என்று கொள்ளலாம். 'வந்தான், நமக்கு, வேண்டா முதலிய சொற்கள் வந்தது, நமகு, வேடா முதலிய கருநாடகச் சொற்களின் சிதைந்த வடிவங்கள் ஆனதால் பாஷாந்திரபவா சொற்களுக்கு உதாரணம் ஆகலாம்' (சூத்.14 உரை).

இதன்படி கன்னட வடிவங்கள் மூல வடிவங்கள் என்றும் அவற்றிலிருந்து திரிந்த வடிவங்களே மலையாளம் என்ற கருத்து பெறப்படுகிறது.

வரலாற்று ஒப்பிலக்கண ஆய்வில் தொடக்க காலத்தில் ஒரு மொழியின் வடிவமே தொல்வடிவமாகக் கருதப்பட்டுள்ளது. இப்போது எந்த மொழியிலும் இல்லாத புதிய வடிவம் (hypotetical base) தொல்வடிவமாகக் கற்பிக்கப்படுகிறது.

பாஷாந்திரசமா என்பதற்குள பிற மொழிகளோடு ஒத்த வடிவம் உடையவை என்று பொருள். பொன், நாள், உடல் முதலியவை உதாரணம்.

சமூகக் கிளைமொழி

லீலாதிலகம் மலையாளத்தில் பாமரர், திரைவர்ணணிகர் என்ற இரண்டு சமூக வழக்குகள் இருப்பதைக் குறிப்பிட்டுள்ளது.

'வந்தான், இருந்தான், தேங்கா, மாங்கா என்று கேரளக் கீழ்ச் சாதி மக்கள் பேசுவது உண்டு அன்றோ எனின், அவையெல்லாம் சோளபாஷாச் சொற்களை ஒத்த வடிவம் உடைய தேசபாஷா சொற்கள்; சோளபாஷாச் சொற்கள் அல்ல' (சூ.1 உரை). இங்கு, பாமரர் என்பவரின் பேச்சு மொழிவிளக்கத்தை, கிளை மொழி

> “வரலாற்று ஒப்பிலக்கணம் முழு அளவில் வளர்ச்சி அடைந்து விட்டது. இருந்தாலும் புதிய சிந்தனை என்ற முறையில் ஆசிரியரின் அறிவுத் திறனுக்குச் சான்று...”

வழக்காகக் கொள்ளலாம். மேலும், இங்கு வரலாற்று நோக்கை விட விளக்கமுறை நோக்கும் அமைந்துள்ளதும் அறியத் தகுந்தது.

இன்னொரு இடத்தில் திரைவர்ணிகர் என்ற சமூக மக்கள் பேச்சில் வட மொழி வடிவம் அப்படியே ஒலிப்புடைய வல்லொலிகள் (voiced stops). மூச்சுடை வல்லொலிகள் (Aspirated stops) உச்சரிக்கப்படுவதாகவும்(சூ. 65 உரை) குறிப்பிட்டுள்ளது இன்னொரு சமூகக் கிளைமொழி வேறுபாட்டைக் குறிப்பது ஆகும்.

தொடர்ந்து தமிழ், மலையாள மாறுபாட்டையும் குறிப்பிட்டுள்ளது.

'அங்கு இனி எங்கள் சேத என்று காணப்படில் கூந்தல் என்ற சொல் பாண்டிய பாஷா என்றும், இங்ங இனி எங்ஙள் சேத என்று காணப்படில் கேரளபாஷா என்று முடிவு செய்யலாம்' (சூ.1 உரை)

என்பதில் இரண்டு கருத்துகள் அடங்கியுள்ளன: i. ஒரு சொல் எந்த மொழிக்கு உரியது என்பது அதன் மொழிச் சூழலைப் பொறுத்தது. II.தமிழ்- மலையாள மாறுபாடு, அதாவது மெல்லினம் + வரும் வல்லினம் = தமிழ்; மெல்லினம் + இன மெல்லினம் = மலையாளம். வரலாற்று ஒப்பிலக்கண நோக்கில் ஒலி இணை (phonetic correspondence) ஆகும்.

லீலாதிலகப் பாகுபாடு



ஒப்பியல்

நான்கு மொழிகளின் சொல் வகைப்பாட்டிலும் ஒற்றுமையும் வேற்றுமையும் அமைந்துள்ளது வெளிப்படை. தொல்காப்பியம்

வடமொழி என்று மட்டும் கூற, பிற மொழி இலக்கணங்கள் தற்சமம், தற்பவம் என்ற வேறுபாடு செய்துள்ளன. அது போல் தேசியம், கிராமியம் என்ற கருத்ததைவுகள் அந்த மூன்று இலக்கணங்களில் இன்னொரு ஒற்றுமை.

அவைகளுக்கு மேலாக ஒவ்வொரு இலக்கணமும் சில தனித்துவம் உடையது.

தமிழில் இயற்சொல், திரிசொல், திசைச் சொல் என்ற பாகுபாட்டில் இன்னொரு பாகுபாடு புதைந்துள்ளது. இயற்சொல் / திரிசொல் என்ற மாறுபாடு நேரடியாக பொது வழக்கு / செய்யுள் வழக்கு என்ற கருத்தையும் இயற்சொல் / திசைசொல் என்பது செந்தமிழ் நிலம் / செந்தமிழ் சேர்ந்த நிலம் என்ற வட்டார வழக்கு மாறுபாடு என்ற கருத்தையும் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

தெலுங்கில் அச்சதெலுங்கு என்பது தற்சமம் ஒழிந்த மூன்று (தற்பவம், தேசியம், கிராமியம்) என்பது விளக்கமுறை நோக்கு ஆகும். ஆனால் அதற்குள் வரலாற்றுச் சமூக உணர்வு புதைந்துள்ளது.

கன்னடத்தில், தற்சமம் என்பதைப் புதுப்பொருளில் கையாளப்பட்டுள்ளது உலகப் பொதுமை என்பது வடமொழி / கன்னடம் என்று இரண்டு மொழி வாயிலாக அமைவது.அல்லது வடமொழி கடனாண்டது என்று தைரியமாகக் கூறக் காலச் சூழலால் தயங்கியது என்று கொள்ளலாம்.

மலையாளத்தில் பாஷாந்திர பவா, பாஷாந்திர பவா என்று வேறுபடுத்தப்பட்டுள்ளது ஒப்பிலக்கணத்தில் இனச் சொற்கள் (cognates) என்று கருத்தின் முன்னோடி. அதாவது, வரலாற்று ஒப்பிலக்கணத்துக்கு ஒரு வழி காட்டி. லீலாதிலகம் நூலே இருபதாம் நூற்றாண்டில் கண்டறியப்பட்டதால், முன்னரே வரலாற்று ஒப்பிலக்கணம் முழு அளவில் வளர்ச்சி அடைந்து விட்டது. இருந்தாலும் புதிய சிந்தனை என்ற முறையில் ஆசிரியரின் அறிவுத் திறனுக்குச் சான்று1.

அடிக்குறிப்பு

1. தெலுங்கு இலக்கணம் தொடர்பான ஐயங்களை முனைவர் சி.சாவித்திரியும் (தமிழ்ப் பல்கலைக்கழகம்), கன்னட இலக்கணம் தொடர்பான ஐயங்களை முனைவர் ஜெயலலிதாவும் (திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம்) விளக்கியமைக்கும், பேராசியரியர்கள் க.இராமசாமி, க.நாச்சிமுத்து, இரா.அறவேந்தன், பா.மதிவாணன் ஆகியவர்கள் கட்டுரையைப் படித்துக் கருத்துரைத்தமைக்கும் நன்றி.

இது, புது தில்லி, ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகம், மொழி இலக்கியம் பண்பாட்டுப் புலம் ஏற்பாடு செய்த இணையவழிக் கருத்தரங்கில் 25-8-2020 அன்று பேசியப் பேச்சைத் தழுவியது.

துணையன்கள்

சண்முகம்,செ.வை., 1992, 'திராவிட மொழி இலக்கணங்களின் சொல்வகைப்பாடு' மலையாள மொழியின் முதல் இலக்கணம். பக்.145- 57. மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சாவித்திரி,சி, 2014 (தமிழாக்கம்) முதல் தெலுங்கு இலக்கணம், ஆந்திர சப்த சிந்தாமணி, ஆதித்யா பப்ளிகேஷன், உடுமலை.

Kulli.J.S. 1976 . Ke:siraja: 's Sabdamanı darpana, Dharwar.

Ramaswany Iyer. 1944, Grammar ın Li:la:tilakam, Thiruchur

Subrahmaniya, P.S. 1985 ' Ketana's Telugu grammar- A review'. Paper

Presented in Symposium on Grammatical Heritage of South Indian Languages with special refrence to Tamil, S.V. University. Tirupati.

****

பொருநராற்றுப்படை
– ஒரு சூழலியற்பார்வை

கசுத்தூரி இராமசாமி,
பயிரியல்துறைப் பேராசிரியர்(ப.நி.)
தொடர்புக்கு: 90954 12239

அறிமுகம்

பத்துப்பாட்டுள் இரண்டாம் பாட்டு பொருநராற்றுப்படை. இந்நூலை இயற்றியவர் முடத்தாமக்கண்ணியார். பாட்டுடைத் தலைவன் கரிகால்பெருவளத்தான். கரிகால் வளவனிடம் பரிசில் பெற்ற பொருநன் வழியில் எதிர்ப்பட்ட பொருநனை அவனிடம் ஆற்றுப்படுத்திப் பாடிய நூல். இப்பாடல் 248 அடிகளைக் கொண்டது. சோழநாட்டின் வளமும் காவிரியின் சிறப்பும் 177 அடி முதல் 248 அடி ஈறாக 72 அடிகளில் இடம்பெறுகின்றன. இப்பகுதி கரிகால்வளவனின் ஆட்சியில் இருந்த பண்பாட்டுச் சூழலையும் இயற்கைச் சூழலையும் படம்பிடித்துக் காட்டுகின்றது.

காவிரி வளம்

வறகடம் உண்டான காலத்தும் நரந்தம்புல், அகில், சந்தனம் ஆகியவற்றைக் கொண்டுவந்து நீர்த்துறைகளில் ஒதுக்கும் ஆறு காவிரி. காவிரியால் ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளையும்படியான வளம் கொழிக்கும் நாடு எனக் காவிரியின் வளத்தைச் சிறப்பித்துப் பாடியுள்;ளார்.

மக்களின் நல்லிணக்கம்

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலங்களும் ஒன்றுடன் ஒன்று பொருந்துமாறு ஒரு குடையின்கீழ் ஆண்;ட பெருமன்னன் கரிகாலன் எனப் பாடிய புலவர் அங்கு மக்கள் எங்ஙனம் வாழ்ந்தனர் என்பதையும் பதிவு செய்துள்ளார்.

குறிஞ்சிநில மக்கள் தேனையும் கிழங்கையும் நெய்தல்நில மக்களிடம் கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து மீனெண்ணெய் பெற்றனராம். அதுபோலவே, மருதநிலத்தவர் கரும்பு, அவல் ஆகியவற்றைக் குறிஞ்சி நிலத்தவரிடம் கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து மான் தசைகளைப் பெற்றனராம் (214-217). பண்டைத் தமிழகத்தில் இத்தகைய பண்டமாற்று நிகழ்ந்தது என்பதை அறியமுடிகிறது.

குறிஞ்சிப் பண்ணைப் பரதவர் பாடவும், நெய்தல் என்ற நறுமலர்க் கண்ணியைக் குறவர் சூடிக் கொள்ளவும், முல்லை நிலத்து மக்கள் மருதப் பண்ணைப் பாடவும், உழவர் நீலநிற முல்லைக்கொடி படர்ந்த காட்டு நிலத்தைக் கொண்டாடுவர் (218-221) எனப் பாடியுள்ளார். ஒரு நில மக்கள் மற்றநில மக்களுடன் இணக்கமாக வாழ்ந்தனர் என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

மகிழ்ச்சியில் விலங்கினங்கள்

மக்கள் மட்டுமன்றி, பறவைகளும் இணக்கமாக வாழ்ந்தன என்பதையும் காட்டியுள்ளார்;. முல்லைநிலத்துக் காட்டுக்கோழிகள் மருதநிலத்து நெற்கதிர்களைத் தின்னும்; மலையில் உள்ள குரங்குகள் உப்பங்கழியில் மூழ்கும்; கழியில் திரியும் நாரைகள் மலைகளுக்குள் செல்லும் (222-225). நானிலக் கருப்பொருளும் நானில மக்களுக்குப் பயன்படும்படி அமைந்தன என்பதைக் காட்டுவதற்காக நிலங்களுக்கிடையே இருந்த எல்லையை நீக்கிவிட்டார் எனலாம்.

பறவை நோக்கரான புலவர்

ஒல்லென்ற ஓசை கொண்ட அலை புரளும் கரிய கடற்கரைகளால் சூழப்பட்ட அகன்ற நிலப்பரப்பு; அங்கு, தென்னஞ்சோலை; அச்சோலையின் அருகில் நெற்கூடுகள் பொருந்திய மருதநிலம்; அங்கு மருதநிலக் குடிமக்கள் வாழ்வர்; அவர்கள் சமைத்த குருதி தோய்ந்த சிவந்த சோற்றைக் காக்கைக்கு இடுவர்; காக்கை அந்த சோற்றைத் தின்னும்; அந்த உணவு பிடிக்கவில்லையென்றால் காக்கை அங்கிருந்து புறப்பட்டு நெய்தல் நிலத்திற்குச் சென்று அங்குள்ள நொச்சி நிழலில் தங்கும். அங்குள்ள ஆமையின்

பார்ப்பை எடுத்துப் பின்னர் பசி உண்டாகும்போது உண்பதற்காகப் பாதுகாத்து வைக்கும்(177-186).

பறவை ஆய்வாளர்கள் (Ornithologists) பறவைகளின் இருப்பிடங்களுக்குச் சென்று அவற்றின் உணவு, பழக்கவழக்கங்கள், தங்குமிடங்கள், எழுப்பும் ஒலி ஆகியவற்றைக் கண்டறிவதுதான் சிறந்த ஆய்வு என்பார் இந்தியாவின் பறவையியலாளர் சலீம் அலி. முடத்தாமக் கண்ணியாரும் பறவைகள் எங்கெங்கு செல்கின்றன, என்னென்ன உணவுகளை விரும்பி உண்கின்றன என்பதைப் பறவையியலார்போலக் கண்டறிந்து பாடியுள்ளார்.

<u>நாரைகளின் பயணம் இடப்பெயர்வு (Migration)</u>

நாரைகளின் பயணம் மருதநிலத்திலிருந்து தொடங்குகிறது. மருதநிலத்தில் உள்ள நீர்நிலைகளின் அருகில் நாரைகள் வாழ்கின்றன. ஆங்கு, நெல்லும் கரும்பும் விளைந்த வயல்கள் உள்ளன. அந்த வயல்களில் கரும்பை வெட்டுவோரும் நெல் அரிவோரும் பாட்டுப் பாடுகின்றனர். வேலை செய்யும்போது அலுப்புத் தெரியாதிருக்கப் பாட்டுப்பாடுவது இயல்பு. அவ்வாறு பாடுகின்ற உழவரின் பாட்டொலி நாரைகளுக்குப் பிடிக்கவில்லை போலும். அதனால் அவ்விடத்தைவிட்டு அகன்று அடும்பு, பகன்றை முதலிய கொடிகளும் புன்கு, ஞாழல் போன்ற மரங்களும் வளர்ந்துள்ள சோலைகளை உடைய நாட்டை அடையும். பின்னர், அந்த இடமும் பிடிக்கவில்லையெனின் அங்கிருந்து அகன்று சென்று தளவம், தேற்றா, கொன்றை, காயா போன்றவை வளர்ந்துள்ள முல்லைக் காட்டைச் சென்றடையும். அந்த இடமும் பிடிக்கவில்லையென்றால் நாரைகள் நெய்தல் நிலத்திற்குச் செல்லும். சுறாமீன் திரியும் கடற்பகுதிக்குச் சென்று அங்குள்ள இறாவைத் தின்று கடற்கரையிலுள்ள புன்னைமரக் கிளைகளின்மீது தங்கும். பின்னர் அலைகளின் ஆரவாரத்துக்கு அஞ்சி அங்கிருந்து அகன்று உயர்ந்த பனைமரத்தில் தங்கும் (193-207). புலவர், ஒரு பறவை ஆர்வலர்போல, காக்கையும் நாரைகளும் ஓரிடத்தில் தங்காமல் எவ்வாறு இடத்தை மாற்றிக்கொண்டே இருக்கின்றன என்பதைப் பதிவு செய்துள்ளார்.

மயில்களைப் பற்றிய பார்வை

பொதுவாக, புலவர்கள் மயில்களின் அழகையும் ஆடலையும் மட்டுமே வியந்து பாடுவர். ஆனால், முடத்தாமக் கண்ணியார் மயில்கள் எதை விரும்பி உண்ணுகின்றன என்பதையும் கண்டு பாடியிருக்கிறார். வளைவான காஞ்சி மரத்திலும் செவ்விய மருத மரத்திலும் இருந்த மயில்கள் பசிய பாகற்பழத்தையும், பலாப்பழச் சுளைகளையும் தின்றுவிட்டு ஆரவாரம் செய்யுமாம் (189–192). குறிஞ்சிநிலப் பறவையான மயில் மருதநில மரத்தில் இருந்ததாகப் பாடியுள்ளதைத் திணைமயக்கமாகக் கொள்வர். அத்துடன் நில்லாது, நெய்தல் நிலத்தில் ஆடிய மயிலைப் பற்றியும் (208–213) பாடியுள்ளார் முடத்தாமக் கண்ணியார். தென்னையும், வாழையும், சுரபுன்னையும், காந்தளும் வளர்ந்துள்ள ஒரு குடியிருப்புப் பக்கத்தில் மணல்மேடுகள் உள்ளன. ஆங்கேயுள்ள ஆந்தைகள் துடி என்ற இசைக்கருவி முழங்குவதுபோன்று ஓசை எழுப்புகின்றன. வண்டுகள் யாழிசை போன்று ஒலி எழுப்புகின்றன. அதற்கேற்ப மயில்கள் தோகையை விரித்து ஆடுகின்றன.

நிறைவாக

* பண்டைத் தமிழர்களிடம் நேர்த்தியான சூழலியல் பார்வை இருந்திருக்கிறது.
* பறவைகளும் விலங்குகளும் விரும்பும் உணவு, அவை தங்கும் இடம், அவற்றின் இயல்புகள் ஆகியவற்றைக் கூர்ந்து பார்த்துத் தெளிந்த அறிவு பெற்றிருந்தனர். உயிரினங்களின்பால் அன்பும் இரக்கமும் கொண்டிருந்தனர் என்பதும் புலனாகின்றது.
* நானில மக்களும் நல்லிணக்கத்தோடு பண்டமாற்றுச் செய்துகொண்டு ஒற்றுமையாக மனமகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.
* மனிதன் ஒரு சமூக விலங்கு என்னும் உண்மை விளங்கும்படியான பண்பாட்டுச் சூழலையும் பொருநராற்றுப்படை வெளிப்படுத்தி யுள்ளது.

****

அக்டோபர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



ம.பொ.சி.
(அக்.3)

செல்வகேசவராய முதலியார்
(அக்.3)



பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்
(அக்.8)

மு.வரதராசனார்
(அக்.10)

வெள்ளகால் ப.சுப்பிரமணிய முதலியார்
(அக்.12)

சுந்தரராமசாமி
(அக்.15)

கண்ணதாசன்
(அக்.17)

மு.கதிரேசன் செட்டியார்
(அக்.24)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

முனைவர் **ம.திருமலை**
முனைவர் **அ.தட்சிணாமூர்த்தி**
முனைவர் **இ.மறைமலை**
முனைவர் **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **செ.கந்தசாமி**
முனைவர் **மு.மணிவேல்**
முனைவர் **பெ.சுயம்பு**
முனைவர் **இ.கி.ராமசாமி**
முனைவர் **உ.கருப்பத்தேவன்**
முனைவர் **உல.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **அ.நந்தினி**
முனைவர் **ச.கவிதா**

RNI Regd. No.5507/56

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1